Registered as a Newspaper

88 A/L
கம்பனி
ஆசிரியர்: திரு. யோகராஜா
ஆரம்பம்: 01-04-88
வெள்ளி 10-00 - 12-00 a.m.

பொருளியல்
(வினவிடை வகுப்பு)
ஆசிரியர்: திரு. சின்னத்தம்பி
செவ்வாய் 3-30-5-30 p. m.
B. M. C. Lane, Jaffna.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50


88 A/L
WEEKEN CLASS
BOTANY
ஆசிரியர் : திரு குகாதரன்
சூழலியல்
ஆரம்பம் : 02-01-88
Saturday 1-30 p.m-2.30P m
பிறப்புரிமையியல்
ஆரம்பம்: 01-04-88
Friday 10 30 a m 12 30Pm
New Master
INSTITUTE
241, Navalar Road, Jaffna

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஸ்ரீ பங்குனி மீ 17 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 11 (30-03-1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 41

# இ.போ.ச. பஸ்ஸில்
# 'ரைம்' குண்டு வெடிப்பு
## சிங்களவர் 20 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 30

மதவாச்சியிலிருந்து ஹொரவப்பொத்தானைக்குச் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த 'ரைம்' குண்டு வெடித்தது! அதனால் ஆகக் கூடியது 20 சிங்களப் பிரயாணிகள் உடல் சிதறுண்டு மரணமானதாக அறிவிக்கப்பட்டது.

பஸ் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் சிங்களவர்கள் என அறிவிக்கப்பட்டது.

மரக்கறிக் கூடை ஒன்றுக்குள் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்று முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

நேற்று நண்பகலுக்குப் பின்னர், மதவாச்சிக்கும் ஹொரவப்பொத்தானைக்கும் இடையில் உள்ள வேவக் கெட்டிய என்ற இடத்தில் இக் குண்டு வெடிச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பு, மார்ச் 30 இச் சமபவத்தில் மற்றும் சில பயணிகள் காயமடைந்திருக்கலாம் என வும் அறியப்படுகிறது.

குண்டு வெடிப்பினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 20 ஆக இருக்கும் என்று மதவாச்சியில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மதவாச்சியில் இருந்து இந்த பஸ் ஹொரவப் பொத்தானை சென்று கொண்டிருந்தது.

15 ஆம் மைல் கல்லில் இருக்கும் வேவக்கெட்டியா கிராமத்தை தபஸ் அடைந்த சமயம் பஸ்ஸினுள் பெரும் வெடிச்சத்தம் கேட்டது.

நேரம் கணித்து வைக்கப்பட்ட "ரைம்" குண்டுஒன்றேவெடித்தது என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இறந்தவர்களின் சடலங்கள் மோசமாகச் சிதைந்து வீதியில்சிதறிக்கிடந்தன.

இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை சரியாகக்கணக்கிடமுடியவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்
## வங்கிக் கிளையிலும்
## பணப் புழக்கம் வரும்

யாழ்ப்பாணம், மார்ச்30

இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளை யிரும் ப... ரம்பிக்கப்பட உள்ளன. எதிர் வரும் திங்கள் முதல் இது நடைமுறைப் படுத்தப்படும்.

இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் திரு சாம் ...த்தினம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வங்கி பணக் கொடுப்பனவுகளை தற்பொழுது மூன்று கிளைகளிலேயே மேற் கொண்டுள்ளது.

யாழ்நகர் ஆஸ்பத்திரிக் கிளை, ஸ்ரான்லி வீதிக் கிளை, மற்றும் ...ருத்தித்துறை கிளை, ஆகியனவே தற்பொழுது பணப்புழக்கத்தை மேற் கொண்டுள்ளன.

இது அடுத்த திங்கட்கிழமை முதல் காங்கேசன் துறைக் கிளைக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளது

லங்கா சிமெந்து லிமிட்டெட், காங்கேசன் சிமெந்து லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களுடனான

(6ஆம் பக்கம் பார்க்க)


## இன்று முதல் யாழ்தேவி வவுனியா வரை

கொழும்பு, மார்ச் 30

யாழ்தேவி ரயில் இன்று முதல் வவுனியா வரை சேவையில ஈடுபடும்.

ரயில்வே திணைக்களம் இதனை நேற்று அறிவித்தது.

யாழ்தேவி ரயில் சேவை கடந்த சில தினங்களாக அனுராதபுரத்துடன் நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே (ஒ-எ)



மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீள ஒப்படைக்கும் வேலைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகின.

தொடர்ந்து நேற்றும் நகைகள் மீள ஒப்படைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம், பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையில் நகை உரிமையாளர் ஒருவர் வங்கி உத்தியோகத்தர்களிடம் இருந்து நேற்றுத் தமது நகைகளை சரிபார்த்து பெற்றுக் கொள்வதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர் தமது நகைகளை பெற்றுக் கொள்ள வங்கிக் கிளையின் முன்னால் கியூ வரிசையில் காத்து நிற்பதை இரண்டாவது படம் காட்டுகின்றது.

படம்: ஜெயம் (ஒ)

# இந்திய படகை
# கைப்பற்றியது
## ஸ்ரீலங்கா கடற்படை!

கொழும்பு, மார்ச் 30

இந்திய மீன்பிடி இழுவைப் படகு ஒன்றை ஸ்ரீலங்கா கடற்படையினர் ...ச்சதீவுக்கு அருகில் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது

அச்சமயம் அந்த இழுவைப் படகில் ஒரு பெண், நான்கு இந்தியர்கள் உட்பட ஆறு பேர் இருந்தனர் என்றும் அவர்கள் விசாரணைக்காக காரைநகர் கடற்படைமுகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

225 ஜெலிக்னைற் திரிகள், 165 படுக்கை விரிப்புகள் ஆகியனவும் படகிலிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஈ-ஒ)

### யாழ் ஆஸ்பத்திரிக்கு
## குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்30

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு ... இரண்டு லட்சம் ... பெறுமதியான சிறுநீரக குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம் (Dialosis Unit) ஒன்றை நேற்று அன்பளிப்புச் செய்தது.

இந்த இயந்திரம், கடுமையான சிறுநீரகக் கோளாறினால் பீடிக்கப் பட்டுள்ளவர்களுக்கு குருதிச் சுத்திகரிப்பைச் செய்யும்.

யாழ் போதனா வைத்தியசாலையில் இந்த இயந்திரம் இல்லாததினால் சிறுநீரக நோயாளர்கள பெரும் கஷ்டங்களை அனுபவித்து வந்தனர்

இந்த இயந்திரம் கடந்த வார இறுதியில் கனேடியத் தூதரகத்தில் இருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த கனேடிய தூதரகத்தின் அபிவிருத்தி அலுவலர் செல்வி யங் பிரஸ்தாப இயந்திரத்தை உத்தியோக பூர்வமாக அன்பளிப்புச் செய்தார்.

கனடா தனது வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் இந்த அன்பளிப்பைச் செய்துள்ளது.

நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்ட சிறுநீரக குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம் ஒரு தனி பிரிவாக வைத்து இயக்கப்படும். (ஒ-எ-10)

## பல்கலைக் கழகத்தை சுற்றிவளைத்து தேடுதல்
### ஆயுதங்கள் இருந்தனவாம்

கொழும்பு, மார்ச் 30

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தைக் கடந்த திங்கட்கிழமை சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்

அக்பர் மண்டபத்துக்கு அருகில் ரி 56 ரக ரைபிள்கள் புகைக்குண்டுகள் ரவைகள், அரசு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜீ.சி.ஈ. விசேட பரீட்சை:
## உத்தியோக பூர்வமான
### அறிவிப்பு சில தினங்களில்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

தடைப்பட்ட ஜீ.சி.ஈ. பரீட்சை சம்பந்தமாக சாதகமான முடிவு ஒன்று இன்னும் சில தினங்களில் கல்வி அமைச்சரால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படலாம் எனத் தெரியவந்தது.

நேற்றுக்காலை இங்கிருந்து கல்வி அமைச்சரைச் சந்திக்கச் சென்ற விசேட தூதுக்குழு, நேற்றுமாலை திரும்பியது

வடபிரதேசக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் தலைமையில் மேற்படி குழு கொழும்பு சென்றது.

இந்திய அமைதிப் படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்றில் தூதுக்குழுவினர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தூதுக்குழுவினர் கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்காவையும், அவரது செயலாளர் திரு. எல் விஜேமானேயையும் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தியதாக தூதுக்குழுவில் சென்ற உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

விசேடபரீட்சை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தைத் தூதுக்குழு விவரமாகவும், தக்க காரணங்களுடனும் அமைச்சரிடம் எடுத்து உரைத்ததாகவும், அவர் அவற்றை அக்கறையுடனும், சாதகமாகவும் பரிசிலனை செய்ததாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

30-03-1988
பங்குனி 17
புதன்கிழமை
சுபநேரம்:
4 42 முதல் 6.12வரை
ராகுகாலம்:
12 12 முதல் 1.42வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

## யாழ். செயலகமும் சில அலுவலகங்களும்
### நேற்று முதல் செயற்பாடு

யாழ்ப்பாணம் மார்ச் 30

யாழ். செயலகம் உட்பட சில அரச அலுவலகங்கள் நேற்று முதல் மீண்டும் இயங்குகின்றன

யாழ்-செயலகம்,உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், பெற்றோலியம் கூட்டுத்தாபனம, ரயில் நிலையம், கமநல சேவை நிலையங்கள், நீர்வள, வடிகாலமைப்புச் சபை, ஆகியவையே நேற்று முதல் இயங்க ஆரம்பித்தன.

திங்கட்கிழமை ஒருசில மணி நேரம்.

ஏப்ரல் மாதம் 11ஆம் திகதிவரை இந்த அலுவலகங்கள் இயங்குவதற்கு போராளிகள் அனுமதி வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

எனினும் யாழ்-மாநர சபையின் அலுவலகப் பகுதிகள் தொடர்ந்தும் செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்களிலும் இயங்க மாட்டாது என அறியப்படுகிறது. (இ-10)

### வெலிக்கடைச் சிறையில்
## தமிழ்க் கைதிகளின்
### உண்ணாவிரதம் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 30

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வந்த ஒன்பது தமிழ் அரசியல் கைதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து உண்ணாவிரதத்தை இடைநிறுத்தி வைத்துள்ளனர்.

சிறைச்சாலை ஆணையாளர் திரு. எச். ஜி. தர்மதாஸ இத் தகவலை தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில உண்ணாவிரதம் இடைநிறுத்தம் செய்வதற்கான காரணத்தை தெரிவித்துள்ளனர்

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சேபால

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டமான் டில்லியில்

புதுடில்லி, மார்ச் 30

இலங்கை அமைச்சர் தொண்டமான் செவ்வாயன்று புதுடில்லியில் இந்திய தொழில் அமைச்சர் வெங்கட்ராவுடன் இருதரப்பு கிராமிய கைத்தொழில்துறை வளர்ச்சி பற்றி பேச்சுக்கள் நடத்தினார்.

[ஒ-எ]

## வடமராட்சியில் மாணவர் நேற்றுமௌன ஊர்வலம்
### ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்

வடமராட்சி, மார்ச் 30

வடமராட்சிப் பகுதி மாணவர்கள் நேற்று மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர்

இந்த ஊர்வலத்தில் வடமராட்சியிலுள்ள ஆயிரக் கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர்

இன்று பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை.

இந்த ஊர்வலம் மிக நீளமாக இருந்ததன் காரணமாக அப்பகுதியில் சுமார் மூன்று மணித்தியாலம் போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

தடைப்பட்ட ஜீ சி ஈ சாதாரணதரப் பரீட்சையை உடன் நடத்தக் கோரியே இந்த மௌன ஊர்வலம் நடைபெற்றது

மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் ஆகியோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

காலை 9 மணியளவில் வல்வெட்டித்துறை பருத்தித்துறை குஞ்சர்கடையடியில் இருந்து ஆரம்பமான ஊர்வலங்கள் 11 மணியளவில் புலோலி, மந்திகை அமைதிப்படை முகாம் முன்பாக வந்து ஒன்று கூடின.

பின்னர் மாணவர் பிரதிநிதிகள் அமைதிப் படை அதிகாரி கேர்ணல் டி எஸ். துலா. கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஜோதி துரை, வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி சி பெரியதம்பி ஆகியோரிடம் மகஜர்களைக் கையளித்தனர்

[ஒ- 160]

### முச்சந்தி முரளி



கனடாவுக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியாது ...! டாக்டர் மார் எல்லாம் வெளிநாடுகளுக்கு ஓடியிக்கை அந்த நாடு எங்களுக்கு உதவி செய்யுது பாத்தியளே......!

### விடுவிப்பு

இளிநொச்சி மார்ச் 30

முல்லைத்தீவிலுள்ள புதுக்குடியிருப்பு, தேவிபுரம் ஆகிய இடங்களில் இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சிக்குக் கொண்டு வரப்பட்ட நால்வர்பின்னர் விடுவிக்கப்பட்டனர்

(இ-76)

இன்றைய சுகாதாரத்தின் ... இன்றைய நாளேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1 நாள் பிரவுண் பேட்டுக் குஞ்சும் கறுப்பு சேவல் குஞ்சும் 29-3-88 இலும் புறொயிலர் குஞ்சு 30-3-88 இலும் விநியோகிக்கப்படும் விபரங்களுக்கு: R S.K Farm, Murugapathy, Induvil. 2 குபேரன்ஸ் ஸ்டோர்ஸ் கொக்குவில்சந்தி, கொக்குவில் 3 Farm House, கோட்றோட், மல்லாகம். 4. இணுவில் வீடியோ சென்ரர், இணுவில். (2224)

ஒருமாத இரண்டு கிழமை, ஒரு கிழமை, பிறவுண் லவன்லே பேட்டுக் குஞ்சுகளும் ஒரு கிழமை பிறவுண் சேவல் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: R S K. Farm. Murugapathy. Induvil குபேரன் ஸ்டோர்ஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில். [2225]

திறம் இணுவில் புகையிலைப் பாடம் விற்பனைக்கு பிரித்துக் கொடுக்கப்படும் தொடர்பு ஸ்ரீமுருகன் மரத்தொழிலகம் A சனசரட்ணம் 145. நாவலர் றோட் யாழ்ப்பாணம். (2229)

Uplands Farm Ltd. கேழிக்குஞ்சு விநியோகம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை 15 நாள் வளர்ச்சி (Lohmann) சேவல் குஞ்சுகள் விற்கப்படும். விலை ரூ 12-50 உடன் பதிவு செய்க No. 9 சூராவத்தை றோட். கந்தையா லேன், சுன்னாகம் ஸ்ரேசனுக்கு அருகாமையில [2709

இரண்டு மாத பிறவுண் பேட்டுக்குஞ்சு விற்பனைக்கு உண்டு நஜீவரட்ணம் C/o நா. நல்லையா முருகமூர்த்தி கோவிலடி நவாலி தெற்கு, மானிப்பாய் (2348)

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (2715)

Uplands Farm Ltd கோழிக் குஞ்சுகள், 6 04-88 புதன்கிழமை இரண்டுமாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக்கூடிய (Lohmann) சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூ 4 00 முன கூட்டியே பதிவுசெய்க No 9 சூராவத்தை றோட் கந்தையா லேன) சுன்னாகம். ஸ்டேசனுக்கு அருகாமையில், (2708)

### தேவை

யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திலிருந்து ½ இலோ மீற்றர் தொலைவினுள், குறைந்தது 4 அறைகளுடன் கூடிய வீடு ஒன்று கணக்காளர் அலுவலகமாக அமைத்துவதற்கு கம்பனி ஒன்றுக்கு தேவை. Business Promoters (pvt) LTD 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெகு விரைவில் வரவுள்ள இலங்கையின் பிரபல நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்ய விரும்புவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் Business Promoters (pvt) LTD. 198 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உடைகள் தைப்பதற்கு ஆட்கள் (ஆண்கள்) உடன் தேவை. நேரில் வரவும். அல்பி ரெயிலறிங் சென்ரர், உயரப்புலம், ஆனைக்கோட்டை. (2710)

#### மணமகள் தேவை

சொந்த வீடும், தோட்டமும் உள்ள 42 வயது வியாபாரமும் புரியும் இந்து வேளாள மணமகனுக்கு 30-35 வயதிற்கு இடைப்பட்ட நற்குணம் கொண்ட மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கவில்லை அனாதைகள், விதவைகள் கவனத்தில் கொள்ளப்படும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இலக்கம் - 105 C/o உதயன் யாழ்ப்பாணம் (2706)

#### மணமகள் தேவை

லண்டனில் நிரந்தர விசா சொந்த வீடு உள்ள இந்து வேளாள சைவ போசனமுள்ள B.Sc Engineer 32 வயது 5'-6" உள்ள மணமகனுக்கு ஒரு சொல்லிய அழகான I C M A. or B com தகைமை உடைய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள் சாதகக் குறிப்புடன அறிவிக்கவும் வி இ 114 C/o உதயன். (2216)

#### பங்காளர் தேவை

நல்ல நிலையில இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு ரூ. 30,000/- முதலிடக் கூடிய பங்காளர் தேவை. கிறிஸ்தவராயின விரும்பப்படுவர். ஒரு வாரத்துக்குள் விண்ணப்பிக்கவும். விள இல 118 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [2236]

#### வாடகை

வீடு வாடகைக்கு தொடர்பு கொள்ளவும "நெஸ்கோ" காரைநகா வீதி சித்தங்கேணி. (2256)

### காணவில்லை

சுந்தரம் மகேந்திரன் ஆகியஎனது 603452330V இலக்கமுடைய அடையாள அட்டை 25-3-88ம் திகதி மல்லாகம் ஏழாலை வீதியில் காணாமல் போய்விட்டது அதனைக் கண்டெடுத்தவர்கள் சுந்தரம் அன்சன்ஸ் சுன்னாகத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (2235)

மூளாயில் வசிக்கும் எனது 193211429 V என்ற இலக்கமுடைய அடையாள அட்டை ஆஸ்பத்திரி வீதியில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் அதனை கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். ந. செல்வரத்தினம் ரோறு லிமிட்டட் 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (2251)

### சேவை

#### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Futo Enterprises, 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna. (Near Samy & Co.) (1803)

#### போட்டோஸ்ரட்

போட்டோ ஸ்ரற், ரோனியோ, தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும். "சுப்பனன்" 13, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். [2167]

#### TRAINNING

Computer Trainees பலர் உடன் தேவையாதலால், ஏற்கனவே 'Basic' Programming பயின்றவர்களுக்கு குறுகிய கால சிறப்புப் பயிற்சி I B M Computerகளிலும் 450 ரூபா கட்டணத்தில், 4-4-1988 (2-30 p.m.) இற்கு ஆரம்பமாகின்றது தொடர்புகளுக்கு:- IDP Tellippalai.

## Wanted Immediately

Applications are being called for Qualified Pharmacist in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Salary negotiable.

Applications close on: 1-5-88.

For further particulars contact.

The Acting Medical Superintendent
Green Memorial Hospital,
Manipay.

யாழ் ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## வெற்றுச் சாக்குக் கேள்வி

எமது சங்கத்தில் 4705 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு, கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி 2-4-88 ஆகும். கேள்வி விண்ணப்பங்கள் அரச்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
18-3 88

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## கம்பியூட்டர் கல்வி

### Computer Programming in Basic Language

★ வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் பயிற்சி.

★ பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கான பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் ஆகின்றன.

ஆரம்பம் : 6-4-1988 பயிற்சிக் காலம் : 40 நாள்

கட்டணம் : ரூபா 750/- மாத்திரம் இருபிரிவுகளாகச் செலுத்தலாம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

● குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆதலால் நேரில் வந்து விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும். விண்ணப்ப முடிவு நாள : 5-4-88

UNIKCO COMPUTER CENTRE

No 5, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)



## டேட்டா செட் (DATA SET)

### உருக்குத் தளபாடங்கள் (Steel Furniture)

● எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு

✶ பல வருட அனுபவமும் செயற்திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்டவை

✶ மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை
உங்களுக்கு - உங்கள் அலுவலகத்திற்கு
உங்கள் வீட்டுப் பாவனைக்கு ஏற்ற
அனைத்து உருக்குத் தளபாடங்கள்

● வாட்றேப்ஸ் (Wardrobes)
● கபினேட் (Filing Cabinet)
● மேசைகள்
● அலுமாரிகள்
● காசுப் பெட்டிகள் (Cash Box)

மற்றும்

தங்களது விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் தயாரித்து வழங்கப்படும்

தரமானதும் விலை மதிப்பும் உள்ள உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு நல்குவீர்

எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்து பார்வையிடலாம்.

ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்
OFFICE EQUIPMENT LTD.

கிளை அலுவலகம் :
45. பிரப்பங்குளம் வீதி. (Off K. K. S. Road)
யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்தியிலிருந்து 150 யார்)


✶ வாந்திபேதி

## மேலும் பலர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 30

கடந்த 17-ஆம் திகதிக்கும் 24-ஆம் திகதிக்கும் இடையில் மேலும் 38 பேர் வாந்திபேதி நோய் காரணமாக யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கோப்பாய், யாழ் மாநகரப்பகுதி, மானிப்பாய் ஆகிய இடங்களில் இந்த நோய் வேகமாகப் பரவி வருகிறது.

கொதித்து ஆறிய நீரைக் குடித்தல், மலகூடம் பாவித்தல், வெளியிடங்களில் உணவு அருந்துவதைத் தவிர்த்தல், பாடசாலை மாணவர்கள் ஐஸ்கிறீம் மற்றும் வெளியில் விற்கும் உணவுப் பண்டங்களை வாங்கி உண்பதை பெற்றோர் ஆசிரியர் தடுத்தல், பொது நீர் நிலைகளில் நீராடுதலைத் தவிர்த்தல் தனிநபர் சுகாதாரம் பேணுதல், வயிற்றோட்டம் காணப்படின் உடனடியாக அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறல் ஆகியவை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இந்நோயைக் கட்டுப்படுத்த பொது மக்கள் சுகாதாரப் பகுதியினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-18)

### விளையாட்டரங்கு

## எமலியானுஸ்பிள்ளை ஞாபகார்த்த கேடயப் போட்டிமுடிவுகள்

குருநகர், மார்ச். 30

மறைந்த முன்னாள் யாழ் மறை மாவட்ட ஆயர் சலஸ் திதி ஜெறோம் எமலியானுஸ்பிள்ளை ஆண்டகை ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக யாழ் - சென் றோக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் விலக்கல் முறை உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 27 ஆம் திகதி வரையிலான முடிவுகள் பின்வருமாறு:

25 ஆம் திகதி அன்று நடைபெற்ற முதல் சுற்றில் நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்தை எதிர்த்து குருநகர் புனிதவளன் சனசமூக நிலையம் விளையாடியதில் புனிதவளன் கலைவாணி 1—2, கோல் அடிப்படையில் வென்றது.

இரண்டாவது சுற்றில் குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தைக் கொசுகுவில் பொற்பதி எதிர்த்து ஆடியதில் றெக்கிளமேசன் சனசமூக நிலையம் பொற்பதியை 1—6 கோல்கள் என்ற அடிப்படையில் வெற்றிவாகை சூடியது.

26 இல் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை சென் அந்தனிஸ் சனசமூக நிலையம் ஆடியதில் சென் அந்தனிஸ - சென் நீக்கிலஸ் 2—5, கோல்கள் போட்டு வெற்றி பெற்றது.

இரண்டாவது சுற்றுப் போட்டியில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் சனசமூக நிலையத்தை எதிர்த்து திருநகர் பாரதி சனசமூக நிலையம் விளையாடியது திருநகர் பாரதியை - அல்லைப்பிட்டி பிலிப்ஸ் 0—1, கோல் அடிப்படையில் வென்றது.

27 இல் நடைபெற்ற முதலாவது சுற்றில் புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையத்தை எதிர்த்து நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலைய பி பிரிவு ஆடியது. இப்போட்டியில் புங்குடுதீவு பாரதியை - நாவாந்துறை செல்: நீக்கிலஸ் 0—2, கோல்கள் போட்டு வென்றது.

இரண்டாம் சுற்றில் விளையாடிய குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலைய பி. பிரிவினர் எதிர்த்து நின்ற யாழ்- இளைஞர் முஸ்லிம் சனசமூக நிலையக் குழுவினரை 0—1 கோல் என்ற அடிப்படையில் வென்றனர்.

சுற்றுப் போட்டிகள் குருநகர் சென் றோக் விளையாட்டு மைதானத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (இ-51)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


## 1986 ஆம் ஆண்டிற்கான ஆங்கில சான்றிதழ் பரீட்சை

(Certificate Course in English Examination, 1986)

இப்பரீட்சை 16-05-88, 17-05-88 ஆம் திகதிகளில் இராமநாதன் மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

-பதிவாளர்.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் ஏரம்பு தியாகராஜா


மலர்வு: 12-01-1932 உதிர்வு: 29-02-1988

எமது குடும்பத்தின் தலைவராகவும் பாசத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்து எம்மையெல்லாம் வழி நடாத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மையெல்லாம் பிரிந்து நாட்கள் பல மறைந்தாலும் எங்களது நெஞ்சத்தில் என்றென்றும் அணையாத சுடராக ஒளி வீசும் உங்கள ஆன்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி
அன்பு மனைவி, ஆருயிர் பிள்ளைகள்.

அன்னாரின் இல்லத்தில் (30-3-88) இன்று புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமபடியும் அன்புடன் அழைக்கிறோம். (2252)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அகாலமரணமடைந்த

திரு. கணபதிப்பிள்ளை இராசதுரை
(முன்னைநாள் அரசாங்க எழுதுவினைஞர்)

தோற்றம்: 15-04-1942 மறைவு: 1-1 1988

இல்லையென்று சொல்லாது உதவி புரிந்த பெருங் குணவள்ளலாய் துயரமே அறியாது நகைச்சுவையின் நிறைமதியாய், வஞ்சனையே தெரியாது வெள்ளை உள்ளமாய் வாழ்ந்து வழிகாட்டிய எங்கள் ஆசை ஐயாவே!

புது வருட நாளன்று புதுமாயமாய் ஏன் மறைந்தீர்கள்? உங்கள் உயிர் பிரிந்த கதை கேட்டு எங்கள் இதய சுரங்கங்கள் வெந்தணல் நெருப்பாய் எரிகிறது! அழுகிறது!! வேகுகின்றது!!!

எமதில்லத்தில் நாளை 31-3-88 நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்தி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு சகலரையும் வேண்டுகிறோம்,

"பரிமளநிவாஸ்"
ஊறணி,
வல்வெட்டித்துறை.

பிரிவால் துயருறும்
அருமை மனைவி,
ஆசைப் பிள்ளைகள்.

[2254]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வடக்கு கிழக்கில் நடப்பது அண்ணன்-தம்பி சண்டை

## நடிகர் விஜய்காந்த் கூறுகின்றார்

சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன்

இலங்கையின் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் தற்போது நடப்பது அண்ணன்— தம்பி சண்டை.

இப்படிக் கூறினார் நடிகர் விஜய்காந்த்.

தற்போதைய அரசியல் நிலைமை குறித்துத் தமது கருத்தை அவர் உதயன் சஞ்சிகைக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

ஈழத்தில் தமிழுக்காகப் போராடி தமது இன்னுயிரை ஈந்துகொண்டிருக்கும் தமிழ்ப் போராளிகளை முதன்மைப்படுத்தி அவர்களை மையமாக வைத்து படம் எடுக்க எனக்கு ஆவல் அதிகம்.

ஆனால் சென்சார் அனுமதிக்க மாட்டார்கள். இக்க விடயத்திலும் கத்திரிக்கோலுடன் அவர்கள் தயாராக நிற்கிறார்கள்.

ஆனாலும் எனது படத்தில ஆங்காங்கே முடிந்தவரை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல தமிழுணர்வை வெளிப்படுத்தி வருகின்றேன்

சினிமாத் துறையைப் பாவித்து அரசியலில் லாபம் தேடுவது ஆரோக்கியமற்றது சினிமாத் துறையில இருப்பவர்களும் சாதாரண மனிதர்களே. அந்த வகையிலேயே அவர்கள் அரசியலில் செயற்பட வேண்டும்.

### கருணாநிதியை மதிக்கிறேன்

நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்லன். ஆனால் தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதியை நான் மதிக்கிறேன். அவரது தமிழுணர்வை பெரிதும் போற்றுகிறேன்.

ஈழத்தமிழர்கள் தமது சுதந்திரத்தைக் கேட்கிறார்கள். அதில் என்ன தப்பு? அதை ஏன் மற்றவர்கள் உணர்ந்து கொள்ளுகிறார்கள் இல்லை?

இந்தியப் படைக்கும் ஈழத்தமிழருக்கும் இடையில் நடக்கும் மோதல்



விஜய்காந்த்

அண்ணன்-தம்பிசண்டை போன்றது சகோதரர்கள் ஏன்சண்டை போட வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.

யார் மீது தப்பு, யார் சரியானவர்கள் என்பதை நாம் கூறமுடியாது. ஆனால் தமிழர்களை அழிக்கும் செயல் எப்படியாவது நிறுத்தப்பட வேண்டும். நமக்குள்— சொந்தத்திற்குள் —மோதல் நடக்கக் கூடாது

இந்திய சமாதானப் படை அண்ணனை போன்றது அவர்கள் பெருமனது வைத்து பின்வாங்கினால நல்லது; அப்படிச் செய்தால்தான் மோதல் நிற்கும்.

### மக்கள் குழப்பம்

இந்த இராணுவ நடவடிக்கைக்கு பின்னணியாக இருந்த அரசியல நோக்கம என்ன என்பது எமக்குப் புரியவில்லை தொலைக்காட்சிச் செய்தி ஒன்று கூறுகிறது பத்திரிகைகள் வேறு ஒரு விதமாகக் கூறுகின்றன அரசியல் வாதிகள் மற்றொரு விதமாகக் கூறுகிறார்கள். மக்கள் ஒன்றும் புரியாமல் குழம்பிப் போய் நிற்கிறார்கள்.

நான் இந்தியன்தான்; ஆனால் தமிழன் என்று கூறுவதில்தான் நான் பெருமைப்படுகின்றேன். தமிழன் என்ற முறையில் எனது தனிமனித உணர்வை வெளி காட்டத் தவறமாட்டேன்

ஈழத்தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் நாட்டினால், மதத்தினால் வேறுபட்டிருக்கலாம் ஆனால் நாம் எல்லாம் மொழியால் ஒன்றுபட்டவர்கள் எமது உணர்வுகள் ஒன்றுபட்டவை.

ஆகவே ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதி எமக்கும் இழைக்கப்படும் அநீதி போன்றது அதற்கு எதிராகக் குரல் எழுப்ப நான் அஞ்சமாட்டேன்.

எனக்கு ஆதரவாக சுமார் 2 ஆயிரம் ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. அவற்றுடன் சேர்ந்து - அவை மூலமாக தமிழருக்காகக் குரல் எழுப்புவேன்-

ஆனால் ஈழத் தமிழர் விடயத்தில் ஒன்று கூற விரும்புகிறேன். தமிழகத்தில் வந்து தங்கியிருக்கின்ற ஈழத்தமிழர் எல்லோரும் எம்மைப் பொறுத்தவரை ஒரே மாதிரியானவர்கள். அவர்கள் அனைவரும் எமது சகோதரர்கள்.

அவர்களை டெலோ, எல். ரி. ரி. ஈ, புளொட், ஈ. பி ஆர் எல். எவ், ஈரோஸ் என எம்மால் பிரித்துப் பார்க்க முடியாது.

தமிழகத்தில் தங்கியிருப்பவர்களில் யார் தவறு செய்தாலும் - யார் கொலை கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டாலும் – தமக்குள் மோதிக் கொண்டாலும் முழுப் பேரையுமே அது பாதிக்கும்.

இதனை இத்தகைய தேவையற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் உணரவேண்டும்,

ஈழத்தமிழருக்கு உதவுவதற்காக நாம் எடுக்கும் நடவடிக்கைகளை இத்தகைய செயல்கள் பாதிக்கின்றன. இதுதான் எனக்கு வேதனையைத் தருகின்றது.

சளைக்காது போராடும் ஈழத்தமிழருக்காக எந்த வகையிலேனும தொடர்ந்து உதவி செய்ய நான் ஆவலாயிருக்கிறேன்.

இப்படி அவர் கூறினார்.

(இ-உ)

# தமிழ் இயக்கங்களுடன் ராணுவத் தொடர்பு இல்லையாம்

## மக்கள் கட்சி செயலாளர் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 30

புளொட், ஈ பி ஆர். எல். எப். இயக்கங்களுடன் எமக்கு அரசியல் ரீதியான தொடர்பேஉண்டு; இராணுவரீதியான தொடர்பு இல்லை

இலங்கை மக்கள் கட்சி பொதுச் செயலாளர் திரு. வை பி. டி. சில்வா முன்கண்டவாறு தெரிவித்தார்.

புளொட்டின் உதவியுடன் ஐக்கிய சோஷலிச முன்னணிக்கு இராணுவக் கூட்டு உண்டு என்றும் அப்படியான இராணுவப் பிரிவுக்கு மட்டக்களப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் ஆயுதங்கள் வழங்கப்படுவதாகவும் ஜே. வி. பி சுமத்தும் குற்றச்சாட்டு தவறானது என்றும் திரு. சில்வா தெரிவித்தார்.

(ஒ-எ)

# சிரேஷ்ட வகுப்புக்கள் இயங்கமுடியாத நிலை

## அதிபர் கவலை

கொக்குவில், மார்ச். 30

எமது பாடசாலையில் ஆண்டு ஆறு. ஏழு. எட்டு ஆகியவற்றிற்கான வகுப்புக்களை நடத்த முடியாமல் இருக்கிறோம்.

இவ்வாறு பெரியகடை பாரதி பாலர் பாடசாலை நலன் அபிவிருத்திச் சங்க கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய பாடசாலையின் அதிபர் திரு. க சிற்றம்பலம் குறிப்பிட்டார்

விஞ்ஞான ஆய்வு கூடம, நூல் நிலையம் என்பனவும் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இங்கு இல்லை என்றும்,

மேற்படி மாணவர்கள் தொடர்ந்து இங்கு கல்வி கற்றால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்காலிகமாக ஐந்தாம் ஆண்டுவரையிலான வகுப்புக்களை மேற்படி பாடசாலையில் நடத்துவதென்றும் தற்காலிகமாக யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இயங்கும் இந்த பாடசாலையின் வகுப்புக்களை பாடசாலையின் சொந்தக் கட்டடத்தில் இயங்க வைப்பதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (க)

# தமிழகத்திலிருந்து

# காங்கிரஸ் 20 இடங்களுக்கு மேல் கைப்பற்றினால் பதவி துறப்பேன்

## ஆலடி அருணா சொல்கிறார்

புதுடில்லி மார்ச் 29

வரப்போகும் தேர்தலில் இ. காங்கிரஸ் 20 இடங்களுக்கு மேல் பெற்றுவிட்டால் எம்.பி பதவியை ராஜினாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன் ஜனதா கட்சி உறுப்பினர் ஆலடி அருணா நம்பிக்கைத் துரோகம் செய்வதும் தான் காங்கிரசின் கலாசாரம். இது மற்ற அரசியல் கட்சிகளுக்கு ஒரு பாடம்

மாநிலங்களவையில் ஆலடி அருணா மேற்கண்டவாறு கூறினார்

தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டதை அங்கீகரிக்கும் தீர்மானம் மாநிலங்களவையில் விவாதத்திற்கு வந்தது

அதன் மீது நடந்த விவாதத்தில் கழக உறுப்பினர் ஆலடி அருணா பேசியதாவது

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஜனவரி 28 ஆந்தேதி நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு இ காங்கிரசும் ஜெயலலிதா கும்பலும்தான் காரணம்.

அந்தக் கும்பல் தன் போட்டி சட்டசபைக் கூட்டத்தை நடத்தியது

ஆளுனர் குரானா மத்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் இ காங்கிரசாரும் ஜெயலலிதா ஆதரவாளர்களும் போட்டிக் கூட்டம் நடத்தியது தேவையற்றது என்று குறிப்பிட்டிருந்ததை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதற்கு முன்பு எம் எல் ஏக்களை நீக்கியதிலும் இதர நடவடிக்கைகளை எடுத்ததிலும் சபாநாயகருக்கு காங்கிரசார் ஆதரவு கொடுத்தே வந்தனர்

ஜனவரி 28 ஆந்தேதி சட்டமன்றத்தை சபாநாயகர் ஒத்திவைத்தது நியாயமான செயலேயாகும்.

கழக ஆட்சியைக் கவிழ்த்த இ காங்கிரசின் துரோகம் மற்றக் கட்சிகளுக்கு ஒரு பாடம்.

அண்ணா ஜனதா ஆட்சிக்கு ஆதரவு தருவதாக இ காங்கிரஸ் முதலில் அறிவித்தது, பின்னர் முதுகில் குத்திவிட்டது தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியை மத்திய அரசு திணித்தது கண்டிக்கத் தக்கது.

அண்ணையாரின் ஆட்சிக்குத் துரோகம் செய்த காங்கிரஸ் கட்சி வர இருக்கும் தேர்தலில் 20 இடங்களுக்கு மேல் வெற்றிபெற்றால், நான் எம். பி பதவியை ராஜினாமச் செய்யத்தயார்.

இவ்வாறு ஆலடி அருணா பேசினார்.

(இ-உ)


# பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா:

## உடனடி வேலை வாய்ப்புகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஓட்டோ மெக்கானிக் | | 700 | — | 800 | SR |
| 2 | கனரக வாகன செலுத்துநர்கள் | — | 550 | — | 700 | SR |
| 3. | லுப்பி (B) றிகேஷன் வல்லுநர் | — | 700 | — | 800 | SR |
| 4. | கனரக ஈகுவிப்மன்ட் மெக்கானிக் | — | 700 | = | 800 | SR |
| 5. | மோட்டார் மின்சுருள் சுற்றும் வல்லுநர் | — | 700 | — | 800 | SR |
| 6. | ஓட்டோ ஏ/சி வல்லுநர் | — | 800 | — | 900 | SR |
| 7. | வீல் பலன்ஸ் ஏலாயன் வல்லுநர் | — | 800 | — | 900 | SR |
| 8. | பொடி திருத்தும் வல்லுநர் (ரிங்கர்) | — | 700 | — | 900 | SR |
| 9 | பெயின்டர்ஸ் | — | 550 | — | 700 | SR |
| 10 | அப்கோல்ஸ்டரி/கண்ணாடி வல்லுநர் (வாகன முகடு செய்யுநர்) | — | 600 | — | 850 | SR |
| 11 | டியூன் அப் வல்லுநர் (காபறேட்டர்) | — | 700 | — | 800 | SR |
| 12. | இலிகிதர் | — | 500 | — | 700 | SR |
| 13 | குழாய் பொருத்துநர் | — | 500 | — | 700 | SR |
| 14 | Welder | — | 550 | — | 700 | SR |
| 15 | லேத் மெஷின் டெக்னீசியன் | — | 600 | — | 750 | SR |
| 16 | தச்சன்மார் | — | 600 | — | 750 | SR |
| 17 | மேசன்மார் | — | 600 | — | 750 | SR |
| 18 | இயந்திரவியல் என்ஜினியர் | — | 1800 | — | 2250 | SR |
| 19 | இலத்திரனியல் என்ஜினியர் | — | 2000 | — | 2500 | SR |
| 20. | மின்னியல் | — | 2000 | — | 2500 | SR |
| 21. | மின்பட வரைஞர் | — | 1000 | — | 1500 | SR |
| 22. | மின்னியலாளர் | — | 600 | — | 800 | SR |
| 23. | A/C தொழில்நுட்பவியலாளர் | — | 750 | — | 900 | SR |
| 24. | சாரியதரிசி/தட்டெழுத்தாளர் | — | 700 | — | 850 | SR |
| 25. | டெலெக்ஸ் ஒப்பரேற்றர்கள் | — | 650 | — | 800 | SR |
| 26 | ஏயர் போட் கிளீனர்ஸ் | — | 350 | + | 100 | |
| | ஒப்பந்தம் 3 வருடம். | | | | | |
| 27 | ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் | — | 350 | + | 100 | |
| | ஒப்பந்தம் 3 வருடம் | | | | | |

## ★ குவைத்

| | | |
|---|---|---|
| 1. ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் | — சம்பளம் 35 KD | ஒப்பந்தம் 2 வருடம் |
| 2. கவுஸ் மேட் | — சம்பளம் 30 KD | ஒப்பந்தம் 2 வருடம் |

முக்கிய குறிப்பு:-

ஆவலுடையவர்கள் வரும் 3-4 88 இல் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்க வேண்டும். அதற்முன் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

முற்பணம் அறவிடப்படமாட்டாது, செய்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8 30 மணி முதல் மாலை 4 30 மணி வரை நிலையம் திறந்திருக்கும்.

தொடர்பு:-

# கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்



# பிரயாண ஒழுங்குகள்

## ✯ சவூதி அரேபியா

| | (வயது) |
|---|---|
| ★ எயாப்போட் கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஹொட்டல் வெயிற்றர்ஸ் | 21-40 |
| ★ லேபரர்ஸ் | 21-40 |

## ✯ குவைத்

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)

தமிழ் முஸ்லிம் இருபாலாரும் 30-3-1988க்குள் 5 படம் பாஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

## ✯ குவைத்

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் வயது 17இலிருந்து 45வரை

சம்பளம் K.T. 30 டினார்.

2 மணித்தியாலம் மேலதிக வேலை

3 வருட ஒப்பந்தம்

சாப்பாடு தங்குமிடம், வைத்தியவசதி எல்லாம் இலவசம்.)

## ★ சவூதி அரேபியா

எயாப் போட் கிளீனேர்ஸ்

51 பேர் உடனடியாகத் தேவை குறைந்த கட்டணம். கடடுப்பணம் 7500/-

ஒப்பந்தங்கள் 6 மாதங்கள் சம்பளம் 450 SR யுனைற்றட் வழங்கும் மற்றுமொரு துரித சேவை. 3 தொடர்கள் 5 நாட்களுக்குள் குறைந்த செலவில் சிறந்த கொம்பியூட்டர் முறையில் கலர் பிலிபஸ் சுருள் வீடியோ மூவியும் கொடுக்கப்படும.

மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

# யுனைற்றட் இன்ரநஷனல் ஏஜன்சி

666, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

(யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்)



# SCIENCE ACADEMY

(B. M. C. க்கு முன்பாக)

Jaffna.

**DAY CLASS** காலை வகுப்பு

பௌதிகம்: Mr. மணியம் B.Sc.

- ✶ மின்னோட்டத்தின் காந்த விளைவு (காந்தவியல்)
- ✶ மீள்தன்மை ஈர்ப்புப்புலம்
- ✶ HEAT கலோரிவியல் (துரித மீட்டல்)

**DAY CLASS** (மாலை)

பௌதிகம்:

Mr. சோதிலிங்கம் B. Sc.

1-30 சடப்பொருளியல் (துரிதமீட்டல்)

2-30 வெப்பவியல்

12-30 ஒலியியல்

ஆரம்பம் : 1-4-88 வெள்ளி



# யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காக கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்து விடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான் !!



# உதயசேவை

இலவசம்! இலவசம் !!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களுக்கு நிவாரணம் வேண்டும்

## மயிலிட்டிக்கரை பிரசைகள் குழு கோரிக்கை

காங்கேசன்துறை, மார்ச் 30

இரவு நேரம் மீன் பிடிப்பதற்குத் தடை விதித்துள்ளதை வாபஸ் பெறவேண்டும். அன்றேல் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை மயிலிட்டிக்கரைப் பிரசைகள் குழு இந்திய அமைதிப் படை அதிகாரிகளுக்கும் யாழ். அரச அதிபருக்கும் விடுத்துள்ளது.

மயிலிட்டிக்கரைப் பிரசைகள் குழுச் செயலாளர் திரு. செ தனபாலசிங்கம் அமைதிப்படை அதிகாரிகளுக்கும், யாழ் அரசாங்க அதிபருக்கும் அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய காலநிலை இரவு நேரம்தான் மீன்பிடிக்க உகந்தது. பகல் நேரத்தில் மீன் பிடிக்க உகந்த காலம் அல்ல இது.

இரவு நேரம் மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியைச் சேர்ந்த 3000 மீனவ குடும்பங்களும் அவர்களை அண்டி வாழும் 5000 குடும்பங்களும் பட்டினி கிடக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவம் மீன் பிடிக்குத் தடை விதித்த காலத்தில்மாதா மாதம் நிவாரணங்கள் கிடைத்தன.

ஆனால் இப்போது எந்த விதமான நிவாரணமும் இன்றி மீனவர்கள் பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர்.

அத்துடன் மீன்பிடிக் காலமான இக்காலத்தில் உழைக்கும் உழைப்பைத்தான் மீதியான காலத்திலும் மக்கள் நம்பி வாழ்கிறார்கள்.

ஆகவே இரவு மீன் பிடியை அனுமதிக்க வேண்டும். அன்றேல் நிவாரணம் கிடைக்க உதவ வேண்டும். இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்புச் செயலாளர் திரு. ஞா. பரமானந்தமும் இக்கோரிக்கையை வலியுறுத்தி மகஜர் சமர்ப்பித்துள்ளார். (இ-68)

## அடையாளக் கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், மார்ச்30

வடபிராந்திய மினிபஸ் சேவை சங்கத்தின் சமாஜ உறுப்பினர்களுக்கு விசேட அடையாளக் கார்ட்டுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வட பிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத்தின் சமாஜத் தலைவர் திரு. பொன் மதிமுகராசா மேற்கொண்டுள்ளார். (ஒ-10)

## விண்ணப்பங்களைப் புதுப்பிக்கக் கோரிக்கை

குருநகர், மார்ச் 29

வடமராட்சிப் பகுதியில் 1987 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஸ்ரீலங்கா ராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் சர்வோதய வடமராட்சிப் பிரதேச நிலையத்தில் முன்னர் விண்ணப்பித்து இருந்தால் நிவாரணம் பெறுவதற்கு திரும்பவும் விண்ணப்பங்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

புதிதாக விண்ணப்பிப்பவர்களும் வடமராட்சி சர்வோதய பிரதேச நிலையத்தில் (மாலுசந்தி) தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-51)

## 6ஆம் வருட மாணவர் புலமைப்பரிசில் பரீட்சை ஜூலை24 இல்

மானிப்பாய், மார்ச் 30

பாடசாலை மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான ஆறும் வருட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி நடைபெறும்.

பரீட்சை ஆணையாளர் திரு. டபிள்யூ. எஸ். பெரேரா இதனை அறிவித்துள்ளார்.

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான இதே பரீட்சை ஆகஸ்ட் 14ஆம் திகதி நடைபெறும்.

மேற்குறித்த திகதிகளில் காலை 9 30 முதல் 10.45 மணிவரை கணிதமும், பகல் 11.15 முதல் 12.15 மணிவரை தமிழ் பாடமும் நடைபெறும்.

இப் பரீட்சைகளுக்குத் தோற்றத் தகுதியுடைய மாணவர்களின் விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பாக தத்தம் வட்டாரக் கல்வி அதிகாரிகள் மூலமாக அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை பரீட்சை ஆணையாளர் கேட்டுள்ளார். (இ-90)

## பஸ் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச்30

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டு வந்த யாழ்ப்பாணம்- திருகோணமலை, யாழ்ப்பாணம்- மட்டக்களப்பு சேவைகள் கடந்த பல நாட்களாக நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு சேவைகள் இடையிடையே நடத்தப்பட்டு வந்தனவாயினும் மீண்டும் மறு அறிவித்தல் வரை அந்தச் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. (ஒ-10)

## ஜனாதிபதியின் புதிய சிந்தனை புதிய பாதை

புதிய சிந்தனை. புதிய பாதைக்கு நாடு தயாராக வேண்டும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்கண்டவாறு வேண்டுகோள்விடுத்தார்.

பண்டாரவளையில் நடந்த இளைஞர் விழாவின் இறுதி நாள் வைபவத்தில் ஜனாதிபதி பேசினார்.

புதிய சிந்தனையை ஏற்க நாம் தயாராக வேண்டும். அதற்கு எமக்கு மனக் கதவுகள் திறந்து இருக்க வேண்டும்

வடக்கு, கிழக்கு, தென் மாகாணங்களில் இடம் பெறும் வன்செயல்கள் விரைவில் முடிவுக்கு வந்து விடும்.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

## தங்காலையில் மாணவர்கள் இருவர்கொலை

தங்காலையில் இரண்டு பாடசாலை மாணவர்கள் இராணுவச் சீருடை அணிந்தவர்களினால் கொல்லப்பட்டனர்.

கடந்த வியாழன் இரவு இரண்டு மாணவர்களும் அவர்களின் வீடுகளில் இருந்து இராணுவச் சீருடை அணிந்தவர்களினால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வெள்ளி காலை அவர்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வயல் வெளியில் கிடக்கக் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இக் கொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக தங்காலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடையடைப்பு நடத்தப்பட்டது. (ஒ-எ)

## கைதானார்

மட்டக்களப்பு மாவட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் சங்க செயலாளர் திரு. பூ. நடேசானந்தம் தனது வீட்டில் வைத்து இந்திய படையினரால் கைது செய்யப்பட்டார்.

## கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

### மேர்ஜ் கோரிக்கை

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 9 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இன்னும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் பேரில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் பொதுமன்னிப்பு வழங்கிஇவர்களை உடனடியாக விடுதலை. செய்ய வேண்டும்

இப்படி வடபிராந்திய இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்' (மேர்ஜ்) கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள இந்த அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்குப் பொது மன்னிப்பும் விடுதலையும் வழங்கவேண்டும் என்றும் இயக்கம் இலங்கை இந்திய அரசுகளுக்கு அறிக்கை மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. (இ-9)

## நீர்வேலியில் தேடுதல்

நீர்வேலிப் பகுதியில் இந்திய அமைதிப் படையினரால் நேற்று தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக நீர்வேலிப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு, இளைஞர்கள் அனைவரும் நீர்வேலி இந்து ஆலயமொன்றில் தடுத்து வைக்கப்பட்டனர்.

பின்னர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்று அறியவருகிறது.

## நூற்றாண்டு விழா

வட்டுக்கோட்டை, மார்ச் 30

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் நூற்றாண்டு விழா ஏப்ரல் 30 ஆம் திகதி நடைபெறும்.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பல விதமான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு சபையின் செயற்குழு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சி

### பாடசாலைக்குப் பாராட்டு

பலாலி, மார்ச் 30

மிகக் குறுகிய காலத்தில் மிகவிரிவான வளர்ச்சியை கல்வியிலும், அபிவிருத்தியிலும், வெகுஜனத்தொடர்பு முறையிலும் இந்த வித்தியாலயம் கண்டுள்ளது.

கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு ஆர் கே. குலசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விளையாட்டுத் துறைச் செயலாளர் திரு. சு. கணேசலிங்கம் நன்றி தெரிவித்தார்

முறையே பண்டிதமணி,சிவநாத பிள்ளை, கதிரவேலு இல்லங்கள் முதலாம் இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன. (இ-119)

## மகேந்திரபுர மக்கள் நன்றி

யாழ்ப்பாணம்,மார்ச் 30

பாஷையூர் மகேந்திரபுர மக்களுக்கு ஏற்பட்ட வாந்திபேதியை குறுகியகாலத்தில் கட்டுப்படுத்தியவர்கள் யாழ் மாநகரசபை சுகாதார வைத்தியப்பிரிவினரே.

அவர்களுக்கு எமது நிலைய நிர்வாகிகள் சார்பிலும் மகேந்திரபுர மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலையத்தினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க)

## நெப்போலியனின் வீரத்துக்கு அவனின் பயிற்சிகளே காரணம்

குருநகர், மார்ச் 30

'நெப்போலியனின் வீரத்திற்கு அவனது இளம் பிராயத்தில் பனிமலை உச்சியில் அவன் மேற்கொண்ட பயிற்சிகளே மிகவும் தூண்டுகோலாக அமைந்தன'.

குருநகர் சென்.ரேக் சனசமூக நிலையம் நடத்தும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ். பேராலய பங்குத் தந்தை வண. பிதா ஹில்லறி ஜெபநேசன் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

இன்றைய இளைஞர்கள் இதுபோன்ற உணர்ச்சி வசமான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் எவ்வளவோ நன்மைகளைப் பெறலாம்.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் அனைத்து சனசமூக நிலைய விளையாட்டு வீரர்களும் தங்கள் திறமையை இப் போட்டிகளில் வெளிப்படுத்தி வெற்றிவாகை சூடவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி குருநகர், கடற்கரை வீதி சென். ரேக் விளையாட்டுமைதானத்தில் தினமும் நடைபெற்று வருகிறது. (இ-51)

## விடுதலை

மட்டக்களப்பு,மார்ச் 30

இந்திய அமைதிப் படையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மாவட்ட தொழிற் சங்க சம்மேளன செயலாளர் சட்டத்தரணி பொன். வேணுதாஸ் விடுதலை செய்யப்பட்டார். (இ-21)

## கட்டைக்காட்டில் அமைதிப்படை முகாம்

குருநகர், மார்ச் 30

தாளையடிக்கும் பூனைத்தொடுவாய் என்னும் இடத்திற்கும் இடையில் அமைந்துள்ள கட்டைக்காட்டில் இந்திய அமைதிப்படையினர் புதிதாக முகாமொன்றை அமைத்துள்ளனர்.

கட்டைக்காட்டில் அமைந்துள்ள தென்னந் தோ[illegible] முகாம் அமைந் [illegible] (இ-51)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 - 12 - 1935

இறப்பு 30 - 3 - 1987

அருளம்மா செபநாயகம்

அன்புள்ள அம்மா,

நிஜமாக இருந்த நீர் எம் வாழ்வில்
நிழற்படமாய் மாறிவிட்ட போதிலும்,
நீர் உண்மையில் இறக்கவில்லை.
எம் உள்ளங்களில் வாழ்கின்றீர்.
அன்பின் சேவையில் அகமகிழ்ந்தீர்-இப்போ
ஆறுதலாய் துயில் கொள்ளுகின்றீர்!
கல்வியிலே எமை உயர்த்த
கண் அயராது பாடுபட்டீர்
காலன் அவன் விதி வசத்தால்
கல்லறையில் இப்போ உறங்குகின்றீர்!
வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய நீர் – உம்
வழியில் நாமும் நடக்க
உங்கள்ஆசி வேண்டுகிறோம்.

உங்களன்புள்ள
கணவன், பிள்ளைகள்.

(2232)

கண்ணீர்ப் பூக்கள்



திரு. த. பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற அரச ஊழியர்)

மலர்வு: 24-1-1924 உதிர்வு: 11-4-1987

அன்பின் தெய்வமே!
நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து ஓராண்டு
ஆகி விட்டாலும்
உங்கள் நினைவு எங்களை
விட்டு என்றுமே
பிரியாது உங்கள் ஆத்மா
சாந்தியடைய முதலாவது
திதி நாளாகிய இன்று
இறைவன் திருப்பாதத்தில்
எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி
அஞ்சலி செய்கின்றோம்,

மனைவி (கமலம்)
பிள்ளைகள் பவானி, பவானந்தன்
மருமகன் செல்வசந்திரன்
உற்றார், உறவினர்

15ஆம் கட்டை,
உடுப்பிட்டி.

அன்பின் அழைப்பு

ஏப்ரல் 1ஆம் 2ஆம் 3ஆம் திகதிகளில்
ஆனைக்கோட்டை கூளாவடி
புதுவாழ்வு நிலையத்தில்
மரணம் - மகிமை - மீட்பு

எனும் பொருளில் சிலுவைத் தியானம் நடைபெறும் – யேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களையும் – ஏற்றுக் கொள்ள விரும்புபவர்களையும் – அன்புடனும் உரிமையுடனும் அழைக்கிறோம்.

—புதுவாழ்வு நிலையத்தார்

ஓர் அரிய சந்தர்ப்பம்!
தவற விடாதீர்கள்!!

கலர் படச்சுருள் கழுவுதல்
முற்றிலும் இலவசம்!

- கலர் பிரதி ஒன்றுக்கு ரூபா 4/75 மட்டுமே
- கொழும்பில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படுகிறது. மிகத் தரமானது.
- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்.
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்பு:

SHABRA

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கடைச்சல் வேக்கு தொழிலாளர்கள் உடன் தேவை

(மரக்கடைச்சல்)

ஒப்பந்த அடிப்படையில் மரக்கடைச்சல் வேலை செய்வதற்கு (ஆண், பெண்) தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை!

தகுந்த வேதனம் வழங்கப்படும்.

தொடர்பு:
27, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
(பெருமாள் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

(2711)

தொழிற் பயிற்சி

Computer Programming & Data Processing in (Basic, Cobal Language

- ★ RADIO & T.V றிப்பயறிங்
- ★ வீடியோ டெக் றிப்பயறிங், எலெக்றிக்கல் வயறிங்
- ★ றீவைண்டிங்
- ★ DRAUGHTSMANSHIP
- ★ ENGINEERING DRAWING (For Engineering Faculty 1st year Student.)

ஆகிய பயிற்சி நெறிகள் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் குறைந்த கட்டணங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்
31-3-88 (கிழமைநாட்கள்)
2-4-88 (சனி, ஞாயிறு)

Jaffna Technical Institute
52/1 ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

SCIENCE ACADEMY, Nallur
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

SPECIAL ENGLISH CLASSES
விசேட ஆங்கில வகுப்புக்கள்

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

இரு பிரிவுகளாக வகுப்புகள் அமையும்

1. A/L தொழில் நுட்ப/பல்கலைக்கழக மாணவர்களுக்கு மொழியின் சகல அம்சங்களுடனும் கூடிய விரிவான கற்கை நெறி: 6 மாதம்.
2. 10 ஆம் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பு: 8 மாதம்.

ஆரம்பம்: 30-3-88 இன்று புதன் 3 p.m.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயசங்கற்பம்**

செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம் செய்தால், எய்த விரும்பியதை எய்தலாம்.

— மகாகவி பாரதியார்.

**உதயன்**

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல-298/8 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24808, 23073

30.03.1988 உ.பெ. இல: 83?

# தொலைபேசிக் கதை!

வடபகுதிக்கு உடனடியாகத் தொலைத் தொடர்பு வசதி செய்து கொடுக்கப்படும் என்று தபால், தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் திரு சுவில் அபயசுந்தரா அறிவித்திருக்கிறார். தென்னிலங்கையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வடபகுதி என்று குறிப்பிடுவது யாழ்ப்பாண மாவட்டமாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் நேரடித் தொலைபேசி வசதி செய்யப்படும் என்றும் முதலில் பத்து "லைன்-லிங்க்" கொண்ட சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் கடந்த மூன்று மாதங்களாகக் கூறப்பட்டு வருகிறது.

பத்து லைன்கள் என்பது மாறி 24 லைன்கள் கொண்ட கொழும்பு - யாழ்ப்பாணம் தொலைத்தொடர்பு சேவை ஆரம்பிக்கப்படும் என்றும்—

அதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் தபாற் கந்தோரிலும், சுண்டிக்குளி தபாற் கந்தோரிலும் பொதுமக்கள் பாவிப்புக்கென மூன்று தொலைபேசிகள் பொருத்தப்படும் என்றும்—

இம்மாத முதல்வாரத்தில் மூன்று தொலைபேசிகளும் இயங்கத் தொடங்கும் என்றும்— கூறப்பட்டு வந்தது.

ஆனால் மார்ச் மாதமும் முடிகின்றது; தொலைபேசிச் சேவை இதுவரை கைகூடவில்லை. அதற்குரிய அறிகுறிகளைத் தானும் காணோம்.

யாழ்ப்பாணத்துக்கான நேரடித் தொலைபேசி வசதி அனுராதபுரம் தொலைத்தொடர்பு நிலையம் ஊடாகவே செய்யப்படும் என்றும்— அதற்கெனத் தருவிக்கப்பட்ட தொழில் நுட்ப இயந்திரம் பொருந்தவில்லை என்றும்—

ஆனால்தான் உத்தேச மட்டுப்படுத்தப்பட்ட கொழும்பு-யாழ் தொலைபேசிச் சேவையைக்கூடச் செய்ய முடியாமற் போய்விட்டது என்றும் — அரசுடன் நெருங்கிய சில வட்டாரங்களில் காரணம் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதென்ற சூழ்நிலையில் தான் தொலைபேசிச் சேவையை ஆரம்பிக்க அரச தரப்பில் ஆர்வம் காட்டப்பட்டது—

தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டதால் அரசுக்கு இருந்த ஆர்வமும் அக்கறையும் குன்றிவிட்டது—

அதனால் தொலைபேசிச் சேவை உட்பட அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் அரசு வழமையான புறக்கணிப்புப் போக்கைக் கடைப்பிடிக்கும்.

— இவ்வாறு வேறு சில வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன.

இவற்றின் மத்தியில் தபால் அமைச்சரின் புதிய அறிவிப்பு பழைய செய்திகளைப் புதுப்பிப்பதாக அமைந்திருக்கிறது.

அரசு தொடர்ந்தும், தமிழ்ப் பகுதிகளைப் புறக்கணித்து — அந்நியப்படுத்தி — கருமங்களை ஆற்றுமானால், தமிழ் மக்கள் தமக்கென ஒரு அரசு நிறுவவேண்டும் என விரும்புவதில் என்ன தவறு?

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை ஆரம்பத்திலேயே வழங்காமையால் ஏற்பட்ட தவறுகளையும், அவற்றால் உண்டாகி இருக்கும் ஆபத்தான விளைவுகளையும் சிங்கள அரசுகள் தொடர்ந்தும் புரிந்து கொள்ளவில்லை— உணர்ந்து கொள்ளவில்லை என்றால் இந்த நாட்டில் அரசியற் பூகம்பம் தொடரவே செய்யும்.

இன்றைய நவீன உலகில் தொலைபேசிச் சேவை ஓர் அத்தியாவசிய சேவை. அது போன்ற வசதிகளைச் செய்வதில் கூட, அரசு தமிழர்களையும், அவர்கள் வாழும் பிரதேசங்களையும் புறக்கணிப்பது அடிப்படை உரிமைகளை மறுப்பதற்குச் சமமானது.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்திற்கென மட்டுமில்லாமல், சகல தமிழ் மாவட்டங்களுக்கும் தொலைபேசி வசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு. தமிழர்களிடமிருந்து வரிப்பணத்தை வசூலிக்க முடியுமானால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க மட்டும் பின்னிற்பது ஏனோ?

# பலஸ்தீனியருடன் அமெரிக்கா பேச்சு

## ஷாமிர் கண்டனம்

ஜெரூசலம், மார்ச் 29

பலஸ்தீனிய விடுதலை இயக்கப் பிரமுகர் இரண்டு பேருடன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் பேச்சுவார்த்தை நடத்தியதை, இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் வன்மையாகக் கண்டித்தார்.

பிரதமர் ஷாமிர், இஸ்ரவேல் நாடாளுமன்றத்தில் கடந்த திங்கள் மத்திய கிழக்குப் பிரச்சினையில் புதிதாக ஏற்பட்டுள்ள நிலைமை பற்றிப் பேசினார்.

அப்போதே இச்சண்டனத்தை அவர் வெளியிட்டார்.

நெருக்கடியான இக்கட்டத்தில் இஸ்ரவேலில் தேசிய ஒற்றுமை நிலவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையில், பலஸ்தீனிய பிரதிநிதிகளுடன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பேச்சுக்கள் நடத்தியதை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் வரவேற்றுள்ளார்.

மத்திய கிழக்கு சம்பந்தமாக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள புதிய யோசனை தொடர்பாக இப்பேச்சுக்கள் நடைபெற்றன.

புதிய யோசனையை இஸ்ரவேல் பிரதமர் நிராகரித்து விட்டார். (எ)

### தலைமைப்பதவிக்கு இந்தோனேஷியா போட்டியிடும்-

1989 இல் அணிசேரா இயக்கத்தினர் தலைமைப் பதவிக்கு இந்தோனேஷியா போட்டியிடும்.

இந்தோனேசியாவின் புதிய வெளியுறவு அமைச்சர் அலி அலற்றஸ் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

தலைமைப் பதவிப் போட்டியில் இருந்து விலகிக் கொள்ளும் எண்ணம் இந்தோனேஷியாவுக்குக் கிடையாது என்றும் சொன்னார்.

## பிஜி பிரதமர் மாறுவை மகாராணி சந்திக்க மாட்டார்

லண்டன், மார்ச் 29

பிஜி குடியரசின் பிரதமர் மாறுவை இரண்டாவது எலிசபெத் மகாராணி சந்திக்கமாட்டார்.

இப்படி பக்கிங்ஹாம் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் மாறு லண்டனுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றார்.

பிரிட்டிஷ் முடியாட்சியுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும் பிஜியின் விருப்பத்தைத் தெரிவிக்கவே பிரதமர் மாறு மகாராணியாரைச் சந்திக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மகாராணிக்குப் பதில் அவரின் செயலாளரையே பிரதமர் மாறு சந்திப்பார்.

இராணுவத் தளபதி சித்திவேனி ரபுக்காவின் புரட்சியைத்தொடர்ந்து, பிஜி குடியரசானது மகாராணியாரின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரல், பிஜியின் ஜனாதிபதியானார். (எ)

## அரசு நிர்வாகத்தில் சிவப்பு நாடாமுறையை ஒழிக்க சீனா முடிவு!

பீகிங், மார்ச் 29

அரசு நிர்வாகம் சீர்திருத்தப்பட்டு சிவப்பு நாடாமுறை ஒழிக்கப்படும் என்று சீன நாடாளுமன்றம் தீர்மானித்து உள்ளது.

தகுதியின்மை, அளவுக்கு அதிகமான ஊழியர் ஆகியவற்றினால் சீன அரசு நிர்வாகம் சீர்கேடடைந்து உள்ளது.

தனியார் நிறுவனங்களில் அரசு தலையீடும் அதிகரித்துள்ளது.

இவற்றை எல்லாம் ஒழித்து அரசு நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும்.

அரசு அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும்.

இப்படி சீன நாடாளுமன்றக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 25 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமானது. (எ)

## அமைதி வழியில் சீன எதிர்ப்புத் தொடர தலாய்லாமா கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 29

சீன எதிர்ப்புக் கிளர்ச்சிகள் திபெத்தில் தொடர்ந்து இடம் பெறட்டும்-

திபெத்தின் ஆத்மீகத் தலைவர் தலாய்லாமா பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஆனால் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் அமைதி வழியில் இடம் பெற வேண்டும் என்று தலாய்லாமா திபெத்தியர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கின்றார். (எ)

## மூலிகைச் செடிகளை அழிவிலிருந்து காப்பாற்றுக

### அமெரிக்கவிஞ்ஞானிகள் வேண்டுகோள்

பாங்கொக், மார்ச் 29

மூலிகைச் செடிகளை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

தாய்லாந்தில் ஐ. நா. சூழல் பாதுகாப்பு மாநாடு ஒன்று கடந்த சனி நடந்தது.

அந்த மாநாட்டிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் மருந்துகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மூலிகைச் செடிகள் சேர்க்கப்பட்டே ஆகின்றன என்றும் அவ்விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (எ)

### ஆப்கன் தேர்தல் அடுத்தமாதம் நடைபெறும்!

மாஸ்கோ, மார்ச் 29

ஆப்கனிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த மாதம் 5 முதல் 14 வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தேர்தல் முடிவு எதிர்கால கூட்டு அரசு பற்றிய அடிப்படையை உருவாக்க உதவும்.

இத்தகவலை ஆப்கன் ஜனாதிபதி நஜிபுல்லா தெரிவித்தார்.

## அமெரிக்கா: ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கறுப்புநிற ஜாக்ஸன் வெற்றி பெறுவாரா?

வாஷிங்டன், மார்ச்29

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கறுப்பு இனத்தைச் சேர்ந்த மதகுரு ஜெஸி ஜக்ஸன் போட்டியிடவாய்ப்பு வழங்கப்படுமா?

திரு ஜாக்ஸன் மிச்சிகன் மாநில பூர்வாங்கத் தேர்தலில் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து இக்கேள்வி எழுந்திருக்கிறது.

மசாசுசெட்ஸ் மாநில கவர்னர் மைக்கல் டுகாகிஸ் என்பவரை திரு. ஜாக்ஸன் மிச்சிகனில் தோற்கடித்தார்.

இதைத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சி மாநாட்டில் வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்கான வாக்குகளை திரு ஜாக்ஸன் பெற்றிருக்கின்றார்.

ஆனால் கறுப்பு இனத்தவர் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யக்கூடிய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை என்று அமெரிக்க அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன (எ)

### ஈரானின்பெண்கள்தற்கொலைப் படை

ஈரானிய ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனி, பெண்கள் தற்கொலைப்படை ஒன்றை அமைத்துள்ளார்.

அமெரிக்க 'வாஷிங்டன் டைம்ஸ்' நாளிதழின் வாராந்த சஞ்சிகை 'இன்சயிட்' இத்தகவலை வெளியிட்டது.

இத் தற்கொலைப்படையில் சுமார் 300 பெண்கள் உள்ளனர் என்று மேற்கு நடுநிலையாளர்கள் தெரிவிக்கின்றனர். (எ)

## வெளி உலகில்

### நான்காவது எண்ணெய்க்கிணறு; தஞ்சை, நன்னிலத்தில்

சென்னை, மார்ச். 29

தமிழ்நாட்டில் நான்காவது எண்ணெய்க் கிணறு இயங்கத் தொடங்கியது.

தஞ்சை மாவட்டத்தில் காவேரிப் படுகையில் கொரடாச்சேரி என்னுமிடத்தில் இக்கிணறு கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்கு நன்னிலம் எண்ணெய்க் கிணறு என்று பெயர் சூட்டப்பட்டது.

3500, மீற்றர் ஆழமான இந்தக் கிணற்றில் இருந்து தினமும் 150 பீப்பாய் மசகு எண்ணெயும் 3000 கன அடி நில வாயுவும் உற்பத்தி செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (எ)

### ஜெயாபாதுரி நியமனம்

புதுடில்லி, மார்ச்29

இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத்தின் தலைவர் பதவிக்கு முன்னாள் ஹிந்தி நடிகை ஜெயா பாதுரி நியமிக்கப்பட்டார்.

ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சனின் மனைவி இவர்.

மத்திய அரசு இந்த நியமனத்தைச் செய்தது. (எ)

### பஞ்சாப்பில் ரொக்கட் லோஞ்சர்கள்!

பஞ்சாப்பில் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது

ஆயுதங்களில் ரொக்கட் லோஞ்சர்களும் அடங்கியிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

### பஞ்சாப்பில் 14 பேர் படுகொலை!

சண்டிகார், மார்ச் 29

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த ஞாயிறு, சீக்கியத் தீவிரவாதிகளினால் 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

அமிர்தஸரஸ் மாவட்டத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இக்கொலைகள் இடம் பெற்றன என்று அறிவிக்கப்படுகின்றது

இதனிடையில் பஞ்சாப் பிரச்சினை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று சில அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்களுடன் பேச்சுக்களை நடத்தினர்:

மூன்று மணித்தியாலம் வரை பேச்சுக்கள் நீடித்தது. (எ)

### "இந்து"வுக்கு கிருஷ்ணன் விருது!

திருச்சூர் மார்ச் 29

இந்து ஆங்கில நாளிதழின் இணை ஆசிரியர் என் ராமுக்கு கிருஷ்ணன் விருது வழங்கப்பட்டது

இலங்கைப் பிரச்சினையில் அவர் பத்திரிகை வாயிலாக ஆற்றிய பணியைக் கௌரவிக்கு முகமாக இவ்விருதை கேரள முதலமைச்சர் இ. கே. நயனார் திரு. ராமுக்கு வழங்கினர். (எ)

### ஐ.நா. மீது ஈராக் கண்டனம்!

பக்தாத். மார்ச் 29

இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததாக ஈராக் மீது ஐ நா குற்றம் சுமத்தியது ஒருதலைப்பட்ச நடவடிக்கையாகும்.

இப்படி ஈராக் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

ஐ நா. பொதுச் செயலாளரின் கூற்று, வளைகுடா யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த ஈரானைத் தூண்டுவதாக அமைகின்றது.

இப்படி ஈராக் மேலும் தெரிவித்தது. (எ)

## சமய சந்நிதிகளில்

### அரிஹரபுத்திர ஐயனார் தேர் உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

புனர் நிர்மாணம் செய்யப்பட்ட சுன்னாகம் தாளையடி ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த தேர் உற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதியன்றும் தீர்த்தோற்சவம் 1 ஆம் திகதி அன்றும் நடைபெறும்.

இதன்படி உற்சவ நிகழ்ச்சிகள் தினமும் காலை 4 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. (இ—9)

## ஜனவரியிலிருந்து 819 பேர் காணாமற் போய் விட்டனர்

கொழும்பு, மார்ச் 30

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இம்மாதம் 18 ஆம் திகதி வரை 819 பேர் காணாமற்போய் இருக்கின்றார்கள்.

பொலீஸார் நடத்திய ஆய்வு ஒன்றில் இது தெரிய வந்துள்ளது.

இவர்களில் 119 பேர் கொழும்பு மாநகரில் மட்டும் காணாமற் போய்விட்டார்கள்.

ஏனைய இடங்களில் காணாமற் போனவர்கள் பற்றிய சில விவரங்கள் வருமாறு:

கொழும்புவடக்கு:17.
கொழும்பு மத்தி:27.
கொழும்பு தெற்கு:75.
களனி 43.
நீர்கொழும்பு:29.
கேகாலை:44.
சம்மாந்துறை: 40.
குருணாகல்; 53.
காலி: 48.
கண்டி: 56.
களுத்துறை; 27.
இரத்தினபுரி: 34.
தெஹிவளை:53.
மாத்தளை:12.
பதுளை: 24.
நுவரெலியா: 24.
சிலாபம்: 42.
பாணந்துறை:16.
நுகேகொட: 50.
பொலன்னறுவை:20.
மாத்தறை: 21.

(இ-எ)

## கற்க வசதி இருந்தும் நல்ல முறையில் அதனை பயன்படுத்துவதில்லை

மானிப்பாய், மார்ச் 30

"உலகில் பல நாடுகளில் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் பலவித இடையூறுகள் காணப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் பனி, குளிர் காரணமாக வருடத்தில் சிலமாதங்களே கல்வி கற்கும் வசதியுண்டு. ஆனால் [illegible] முழுவதும் கற்கும் வசதி இருந்தும் நாம் அதனை நல்ல முறையில் பயன்படுத்துவதில்லை.

யாழ் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு, எஸ். புலேந்திரன் வர்த்தக ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் தொடர் மதிப்பீடுபற்றி விளக்கம் [illegible]

(6-ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் திருமுகம்

### ஏழாலை மக்கள் எதிர்நோக்கும் கஷ்டம்

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள ஏழாலைப் பகுதியில் மயிலங்காடு மின்மாற்றி ஊடாக மின்சாரம் பெறும் பாவனையாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதன்படி கடந்த சில வாரங்களாக தினசரி இரவு வேளைகளில் இப் பகுதிக்கான மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டு விடுகிறது

இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படைவதுடன் இரவு வேளைகளில் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏழாலை உப அலுவலக அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டபோதிலும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை.

மேற்படி மின்சாரத் தடைக்கு சட்ட விரோத மின் பாவனையானது இப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுவதும் ஒரு காரணமாக இருக்கலாம்

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என ஏழாலை மக்கள் ஏங்கி நிற்கின்றனர்.

ஏழாலைதெற்கு. —தேவன்

### யூனியன் கல்லூரியில் திறப்புவிழா

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழையமாணவர் சங்கத்தினால் திருத்தப்பட்ட கல்லூரி ஆய்வு கூடம், வகுப்பறைகள் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படும்.

யாழ்மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. கே சோமசுந்தரம் இவற்றைத் திறந்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதம கல்வி அதிகாரி (ஆங்கிலம்) திரு. ஆர். கே. குலசேகரம், காங்கேசன்துறை கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்


யூனியன் கல்லூரி அதிபர் திரு சிறீ புஸ்பநாதன் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். (இ)

### நந்தியின் மணிவிழா

இன்று பேராசிரியர் "நந்தியின்" மணிவிழா ஆகும்.

இதனை முன்னிட்டு "ஈழத்துச் சோமு" அன்னாரது இலக்கியப்பணிகள் பற்றி இலங்கை வானொலியில் உரை ஒன்றை ஆற்ற உள்ளார்.

இந்நிகழ்ச்சி இன்றிரவு 9. 30 க்கு இடம்பெறும்.



### பொய்யாமொழி

குறள்:

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

பொருள்:

ஒருவனுடைய சோம்பலிலே கரிய மூதேவி வாழ்கின்றாள்; சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியிலே திருமகள் வாழ்கின்றாள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெகட்டிவ் Processing செய்தல் இலவசம்
★ விற்பனை நிழற்படச்சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

30.03.1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
NEW KONICA S R V 100
நிழற்படச் சுருள்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு:-
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஜெப சேவை

ஜெபமே ஜெயம், உங்கள் பிரச்சினை எதுவாயிருந்தாலும் எங்களுக்கு எழுதுங்கள் எங்கள் ஜெபக்குழு உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும்.

ஜெப சேவை
15, சென். பீற்றர்ஸ் லேன்,
யாழ்ப்பாணம்.
[2705]

## இன்று
மங்களகரமான
## திறப்பு விழா

தரமான புதிய பழைய தமிழ் வீடியோப் படப் பிரதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கவென உருவாகும் புதியதோர் ஸ்தாபனம்,



துவாரகா
வீடியோ சென்ரர்
இன்று புதன்கிழமை
30-3-88 காலை 6 மணியளவில் வரும் சுபவேளையில் திறந்து வைக்கப்படும் அன்பர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மோட்டார் வைன்டிங் வீட்டு மின் இணைப்பு பைப் இணைப்பு மற்றும் மின்சார உபகரணங்களை திருத்திக் கொள்வதற்கு
துவாரகா
வீடியோ சென்ரர்

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
[2257]

## வழங்குநர்களை பதிவு செய்தல்-1988
நல்லூர் பிரதேச சபை
## திருநெல்வேலி

1988 ஆம் ஆண்டுக்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்காக வியாபார ஸ்தாபனங்களிடமிருந்து 1988 - 4 - 15 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள தொகையை விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை என்றபெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

| பொருட்கள்/சேவைகள் | பதிவுக்கட்டணம் |
|---|---|
| 1 காகிதாதிகள் | 50 00 |
| 2 சுகாதார சேவைக்கான பொருட்கள் | 50 00 |
| 3 அச்சிட்ட படிவங்கள் / பதிவேடுகள் வழங்குதல் | 50 00 |
| 4 மின்சாரப் பொருட்கள் | 50 00 |
| 5 சீருடைக்கான துணிகள் / சப்பாத்துக்கள் | 50 00 |
| 6. ஆயுர்வேத மருந்துகள் | 50 00 |

மேலதிக விபரங்களுக்கு இச்சபையுடன் தொடர்பு கொள்ளவும்

கந்தையா சண்முகநாதன்
விசேட ஆணையாளர்
1988-3-28 நல்லூர் பிரதேசசபை

## Wanted Immediately

Applications are being called for Qualified X-Ray Technician in the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Salary negotiable.

Applications close on 1-5-88.

For further particulars contact

The Acting Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay.

முருகா
# V.J.S. Express
யாழ்/கொழும்பு/யாழ்
சொகுசு
## பஸ் சேவை

பிரயாணிகளின் சௌகரியம் கருதி சாவகச்சேரியிலும் கொடிகாமத்திலும் பின்வரும் முகவரிகளில் எமது டிக்கெட்டுகளைப் பதிவு செய்து கொள்ளலாம் என்பதனை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

* விமலாஸ்
இல 9, மொடேண் மாக்கற்,
சாவகச்சேரி.
* கோகிலா கூல் அன் கோப்பி பார்,
பஸ் நிலையம், கொடிகாமம்.

யாழ்ப்பாணத்தில் டிக்கெட் பதிவு செய்யுமிடங்கள்

* லங்கா பில்லிங் ஸ்ரேசன்,
(Lanka Filling Station)
113 மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.
* றேயல் பார்மஸி,
156, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
* சிவானந்தா கபே
648, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்:
V.J.S. EXPRESS
41, விவேகானந்த றோட்,
கொழும்பு— 6
தொலைபேசி: 500748, 501341

## யாழ். பல்கலைக்கழகம் முதுமாணித் தேர்வு

1987 ஆம் ஆண்டுக்கான முதுமாணித் தேர்வு 1988 ஆம் ஆண்டு ஆனிமாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும் ஏற்கனவே இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு நேர அட்டவணை பற்றிய விபரங்கள் அனுப்பிவைக்கப்படும்.

கலைப்பீடாதிபதி,
29 3 88 கலைப்பீடம்

மானிப்பாய் கோவில்பற்று
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ உ.)
## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

மானிப்பாய் கோவில்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 5000 (ஐயாயிரம்) வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப்பணமாக ரூபா. 250/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்வி" என எழுதப்பட்டு "பொதுமுகாமையாளர், மானிப்பாய் பரிஸ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்" என்ற முகவரிக்கு 31-3-88ம் திகதி, (வியாழன்) நண்பகல் 12 மணிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும்,

பொதுமுகாமையாளர்
மானிப்பாய் கோ. ப. ப. நோ. கூ: சங்கம்

திருமலை
## நகரசபைஉறுப்பினர்கள் இன்று பதவி ஏற்பரா?

திருகோணமலை. மார்ச்30

திருகோணமலை நகரசபையின் புதிய தலைவர் உறுப்பினர்களை இன்று பதவி ஏற்கும்படி உள்ளூராட்சி ஆணையாளர் பணித்திருக்கின்றார்.

எனினும் அவர்கள் தங்கள்பதவிகளை இன்று ஏற்பரா இல்லையா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

கடந்த ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலைச் சேர்ந்த இவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் 11 பேர் சிங்களவர் ஒருவர் முஸ்லிம்.

ஜனவரி 8, பெப்ரவரி 10 ஆகிய திகதிகளில் இவர்கள் பதவி ஏற்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் இவர்கள் அன்றைய தினங்களில் நகரசபைக்குச் சமூகமளிக்கவில்லை. [ஓ-எ]

## ஸ்ரான்லி வீதியில் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச்30

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள பிரபல றெக்கோடிங்-மணிக்கூடு திருத்தும் ஸ்தாபனம் ஒன்றில் கடந்தஞாயிற்று கிழமை இரவு திருட்டு நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பிரஸ்தாப ஸ்தாபனத்தின் முன்பக்க கதவுகள் உடைக்கப்பட்டு, வானொலிப்பெட்டிகள், மணிக்கூடுகள், மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் என்பன திருடப்பட்டிருப்பதாக ஸ்தாபன உரிமையாளர் இந்திய அமைதிப் படையிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

திருட்டுப்போன பொருள்களில் பல வாடிக்கையாளரால் திருத்தக் கொடுக்கப்பட்ட பொருள்களும் அடங்குமாம்

கடந்த அக்டோபரிலும் தமது ஸ்தாபனம் பெருமளவில் பாதிக்கப்பட்டதாக ஸ்தாபன உரிமையாளர் தெரிவித்தார். (அ)

### காங்கேசன் - - - -
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கல் வாங்கல்கள் இதன் மூலம் இலகுவாக இருக்கும் என்றும்-

அடுத்து சுன்னாகம், ஊர்காவற்றுறை, மானிப்பாய் ஆகிய கிளைகளுக்கும் இச் சேவையை விஸ்தரிக்க எண்ணியுள்ளதாகவும் திரு. சம் அரியரத்தினம மேலும் தெரிவித்தார். [நு 9]

### ஜீ.சி.ஈ. - - - -
(1-ம பக்கத் தொடர்ச்சி)

வும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் எதிர்பார்க்கப்பட்டது போல, நேற்று உடனடியாக முடிவு தெரிவிக்கப்படவில்லை என்றும் அறிய வந்தது- (ஓ-10)

### தமிழ்க் - - - -
(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்டிகல, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோருடன் பேச்சு நடத்திய பின்னர் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் தமக்கு விடுக்க வேண்டு கோளைத் தொடர்ந்தே உண்ணாவிரதப் போட்டம் நிறுத்தப்பட்டதாக அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்

ஜனநாயகத் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ள மனிதாபிமான ரீதியில் தங்களுக்கு உதவும்படி அரசியல் கைதிகள் ஜனாதிபதியைக் கடிதமூலம் கேட்டுள்ளனர். (ஓ-எ)

### இ.போ.ச. - - -
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தன.

காயமடைந்தவர்கள் மதவாச்சி, அனுராதபுரம் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டனர். (ஓ-எ)

### பல்கலைக் - - - -
(1ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்ப்புப் பிரசுரங்கள், கிறிஸ்கத்திகள் ஆகியவற்றை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர் என்று கூறப்பட்டது?

இது தொடர்பாக மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக் கழகம் தற்சமயம் மூடப்பட்டிருப்பது தெரிந்ததே?

### பண்டத்தரிப்பில் இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மார்ச் 30

"தமிழ்மக்களின் நிலையும் விடுதலைப் போராட்டக் குழுக்களின் ஐக்கியமும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2-30 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரக் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது

மகாத்மா வழி அமைப்பைச்சேர்ந்த திரு. சி. கனகசுந்தரம் பிரஸ்தாப கருத்தரங்குக்குத் தலைமை வகிப்பார்.

பிரஜைகள் குழுக்களைச் சேர்ந்தவர்கள், கல்விமான்கள் மற்றும் பொது மக்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப் படுகிறது (*-ஒ)

### கற்க......
(5ஆம்பக்கத்தொடர்ச்சி)

வாறு கூறினார்.

மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன் துறை வட்டாரப் பாடசாலை வர்த்தக ஆசிரியர்களுக்கான தொடர்மதிப்பீடு பற்றிய கருத்தரங்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

வர்த்தக பாடத்துக்கான கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசா கருத்தரங்கிற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் தொடர்மதிப்பீட்டு முறையின்மூலம் பெரிய அளவிலான மாற்றம் ஏற்படுத்த முடியாவிட்டினும் மாணவரின் கல்வியில்ஒரு மாற்றம் ஏற்படுவதும் அதன்மூலம் மாணவனின் திறமையை வெளிக் கொணர்ந்து சமுதாயத்துடன் இணைந்து வாழக் கூடிய மனப்பான்மையும் ஏற்படுத்த முடியும் என்றார். (இ-90)

உடுப்பிட்டி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
## கேள்விப்பத்திர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 4,750 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு 2-4-88க்கு முன்னர் ரூ. 100/- கட்டி விண்ணப்பப் பத்திரம் எடுக்கவும்.

6-4-88 பகல் 1 மணிக்கு முன்னர் கேள்விப்பத்திரம் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். விண்ணப்பம அனுப்பும் விலாசம்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி ப நோ. கூ. சங்கம்
30-3-88 வல்வெட்டித்துறை.

## நீத்தார் பட்டியல்

### திருமதி சுந்தரம் மயில்வாகனம்

29 - 03 - 88 ஆம் திகதி உதயனின் அறிவித்தலின் படி காலஞ் சென்ற சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த திருமதி சுந்தரம் மயில்வாகனம் சத்திய பாலர் மயூரனின் பாட்டியுமாவார்.

தகவல். சத்தியபாலர்.

### சுப்பையா அருள்ராஜ் (தவம்)

[கிராமசேவை அலுவலர் ஈச்சமோட்டை-முன்னாள் விசேட சேவை அலுவலர்]

சுப்பையா அருள்ராஜ் காலமாகிவிட்டார் இவர் மாட்டின் ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா ஞானம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், வசந்தகுமாரியின் அன்புக் துணைவரும், சௌதாமினி தாட்சாயினி ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், சுண்டிக்குளி காலஞ்சென்ற நாடகக் கலாமணி வி. சி. பரமானந்தம் சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், கந்தசாமி (இ. போ. ச.), கனகம்மா நித்தியலட்சுமி, சரஸ்வதி, மகேஸ்வரி, ஜெயலட்சுமி, தியாகராஜா, தர்மராசா ஆகியோரின் சகோதரரும், சிவபாக்கியம், நடராசா, கதிர்காமத்தம்பி, ரேச்முத்து, காலஞ்சென்ற மகாலிங்கம், குணரத்தினம் (உரிமையாளர் நியூ மஞ்சுளா இன்டஸ்றீஸ் கொழும்பு: தெய்வேந்திரா தியேட்டர், சாவகச்சேரி) பத்மாவதி, ஈஸ்வரி, சகந்தகுணதேவி, நிர்மலா தேவி, ஜீவகுமாரி ஆகியோரின் மைத்துனரும், குகதாசன் (புகையிரத நிலைய அதிபர், இ. பு. பகுதி) சித்தி விநாயகநாதன், ரூபன் ஆகியோரின் சகலனுமாவார்.

ஈமக்கிரியைகள் பிளேச்சர் வீதி, சுண்டிக்குளியிலுள்ள அன்னாரது இல்லத்தில் 31-3-88 வியாழக்கிழமை காலை இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 9 மணிக்கு துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
(2261) இ. குணரத்தினம்

### ஆசிரியை பொன்னம்மா அருளம்பலம்

ஆசிரியை பொன்னம்மா அருளம்பலம் காலமானார் இவர் ராமநாதன் கல்லூரிமுன்னாள் ஆசிரியையும் தவமணி (ரமணி) நவமணி (ராணி யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் பீடத் தலைவர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற பொறியியலாளர் S K நடராசா J L. செல்வராசா [வட பிராந்திய கைத்தொழில் முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் துஷ்யந்தன் ஜெனனியின் பாட்டியும் திருமதி: தங்கம்மா கந்தசாமியின் சகோதரியுமாவார் தொண்ணூறாம் வயதில் 27 3 88 இல் காலமான இவரின் இறுதிக்கிரியைகள் 59 அரசடி வீதி இல்லத்தில் அமைதியாக நடைபெற்றபின் இவருடைய பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார் உறவினர் நண்பர்கள் இதை ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளைகள்

[2250]

### ஞானப்பிரகாசம் லாசரஸ்

ஞானப்பிரகாசம் லாசரஸ் காலமானார் இவர் ஞானப்பிரகாசம் தம்பதிகளின் புதல்வரும் காங்கேசன் துறைச் சீமேந்து கூட்டுத்தாபன முன்னை நாள் ஊழியருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 31-3-88 இன்று பி. ப 2-30 மணியளவில் ஊறணி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
J. செபஸ்தியன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 30-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Wednesday, 30th March 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org